Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**


தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 30 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 30.11.2025 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## மாநில உரிமைகளை மதிக்காமல் அனைத்து வகையிலும்
# தமிழ்நாட்டை ஒன்றிய பாஜக அரசு வஞ்சித்து வருகிறது
## திமுக எம்பிக்கள் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை:மாநில உரிமைகளை மதிக்காமல் அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை ஒன்றிய பாஜக அரசு வஞ்சித்து வருகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த திமுக எம்பிக்கள் கூட்டத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் வரும் டிசம்பர் 1ம் தேதி முதல் 19ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி திமுக தலைவர் முதல்வர்மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மக்களவை-மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம், 'முரசொலிமாறன்வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் இன்று காலை நடந்தது. இந்த கூட்டத்தில் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணைபொதுச்செயலாளர் கனிமொழி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் திமுக மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு: திராவிட மாடல் அரசின் வளர்ச்சியைப் பார்த்து பொறாமைப்படும் ஒன்றிய பாஜகஅரசு,நிதிஆணையத்தின் வாயிலாக நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் மற்றும்அந்தஆணையம் அளித்துள்ள அதிகார பகிர்வுகளை அளிக்க மறுப்பது,மாநிலங்களில் செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் திட்டங்களின் நிதிச்சுமையை இதுவரை இல்லாத அளவிற்கு மாநில அரசின் தலையில் சுமத்துவது, ஒன்றிய அரசு மட்டுமே செஸ் வசூலித்து மாநிலத்திற்கு அறவே அளிக்க மறுப்பது, ஜி.எஸ்.டி இழப்பீடு வழங்காமல் நிராகரித்து, மாநிலத்தின் வரிகளை மட்டும் வசூலித்துக் கொள்வது,மக்கள் நலன் சார்ந்த நல்லாட்சியினை மாநிலத்தில் நடத்துவதற்கு அனைத்து வகையிலும் முட்டுக்கட்டை போடுவது, பாஜகவை ஆதரிக்கும் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் நிதியை வாரி வழங்குவது, சிபிஐ-அமலாக்கத்துறை- வருமானவரித்துறை என அனைத்து தன்னாட்சி அமைப்புகளையும் எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அதிகார துஷ்பிரயோகம் செய்யத் தூண்டுவது, எல்லாவற்றுக்கும் மேலாக ஆளுநர்களை நியமித்து, பாஜக அரசு இல்லாத மாநிலங்களில் அராஜகத்தில் ஈடுபடுவது எனக் கூட்டாட்சிக் கருத்தியலைச் சிதைக்கும்நடவடிக்கைகளைத் தனது அன்றாட "அரசு நடவடிக்கைகளாக" ஆக்கிக் கொண்டுள்ள ஒன்றிய பா.ஜ.க அரசு, திட்டம் போட்டு தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தைதடுத்து, நம் மாநிலத்திற்கான எந்த முத்திரைத்திட்டங்களும் தராமல் மறுத்து, அறிவிக்கப்பட்ட ஒன்றிரண்டு திட்டங்களைக்கூட முடக்கி, "ஒன்றிய - மாநில அரசு நிர்வாக ஒத்துழைப்பில் -!உறவில் ஓர் கருப்பு அத்தியாயத்தை உருவாக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு இக்கூட்டம் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துகொள்கிறது. புதிய ரயில் திட்டங்களும் இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட பல்வேறு முக்கியமானரயில் திட்டங்களும் செயல்படுத்தப்படுவதில்லை" என்று தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. 'ரயில்வே திட்டங்களில் புதிய வழித்தடத்திற்கு 2024-25ல் 31 ஆயிரத்து 450 கோடி ரூபாய் ஒதுக்கீடு. ஆனால் தெற்கு ரயில்வேக்கு வெறும் 301 கோடி ரூபாய் மட்டும்" என்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாரபட்சமான அணுகுமுறையால் அவலநிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு ரயில்வே திட்டங்களுக்கு நிதியும் ஒதுக்காமல் வெறுக்கிறார்கள். புதிய திட்டங்களையும் அறிவிக்க மறுக்கிறார்கள். ரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் நிலையை உடனடியாக கைவிட்டு, மாநிலத்திற்கான ரயில்வே திட்டங்களை ஒன்றிய அரசு நிறைவேற்றிட வேண்டும்.

* கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்து ஒன்றிய அரசு வாய் திறக்காமல் இருப்பதுதமிழ்நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் விரோதமான செயல் என இக்கூட்டம் தனது கண்டனத்தைப் பதிவுசெய்து, இந்த மெட்ரோ ரயில் திட்டங்களை உடனடியாகநிறைவேற்றுவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கிட பிரதமர் நேரிடையாகத் தலையிட வேண்டும். மேலும், இந்த மெட்ரோ ரயில் திட்டங்கள் வருவதற்கு அதிமுக துளியளவும் துணை நிற்கவில்லை என்றாலும், "கைக்குட்டையும் கையுமாகச் சென்று" பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துவிட்டு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி ஒன்றிய பாஜக அரசின் வஞ்சகத்திற்குத் துணை போக வேண்டாம் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.


* மாநிலத்தி' உட்கட்டமைப்பு மற்றும் முன்னேற்றத்தை மனதில் கொண்டு, கோவை - மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களுக்கும்-மதுரைபன்னாட்டுவிமான நிலையத்திற்கும் விரைந்து ஒன்றிய அரசு ஒப்புதல்அளிக்கவேண்டும்.

* கலைஞர்பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல்அளிக்கவேண்டும். சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க கால நிர்ணயம் செய்யும் சட்டப் போராட்டத்தில் ஓயமாட்டோம் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் சபதத்தை நிறைவேற்றும் வகையில் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் திமுக எம்பிக்கள் குரல் கொடுப்பார்கள்.

* செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தில் விவசாயிகளைப் பாதுகாத்திட ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வைத்த கோரிக்கையை உடனடியாகஏற்றுநிறைவேற்றிட வேண்டும்.

* விசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் 17 விழுக்காடு ஈரப்பதத்தில் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்பதை தளர்வுசெய்து,22விழுக்காடு வரை கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும். ஈரப்பத அளவு அதிகரிக்கப்படும் என எதிர்பார்த்த விவசாயிகள் இன்று ஏமாந்து நிற்கிறார்கள். 2024-2025 மற்றும் 2025-2026 ஆகிய இரு கொள்முதல் பருவங்களிலும் ஈரப்பதத்தை அதிகரித்துக் கொடுக்காமல் விவசாயிகளை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசுக்கு இக்கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. உடனடியாக ஈரப்பதத்தின் அளவை அதிகரித்து அனுமதியளிக்க வேண்டும்.

# சென்னைக்கு தெற்கே 330 கி.மீ. தொலைவில் 'டிட்வா' புயல்..
# தமிழக கடலோர பகுதிகளுக்கு "ரெட் அலர்ட்"




'டிட்வா' புயல் இலங்கை மற்றும் அதனையொட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் அதாவது, வேதாரண்யத்தில் இருந்து 140 கி.மீ. தொலைவிலும்,காரைக்காலில் இருந்து தெற்கு-தென் கிழக்கே 170 கி.மீ. தொலைவிலும், புதுச்சேரியில் இருந்து தெற்கு-தென்கிழக்கே 280 கி.மீ. தொலைவிலும், சென்னையில் இருந்து தெற்கே 330 கி.மீ. தொலைவிலும் தற்போது மையம் கொண்டுள்ளது. டிட்வா புயலின் வேகம் தற்போது அதிகரித்துள்ளது. மணிக்கு 10 கி.மீ வேகத்தில் சென்னையை நோக்கி நகர்ந்து வருகிறது. இது தொடர்ந்து வடக்கு - வடமேற்கில் நகர்ந்து நாளை (நவ.30) காலைவடதமிழ்நாட்டை நெருங்கும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே டிட்வா புயல் இலங்கை நிலப்பரப்பில் இருந்து முழுமையாக விலகி, டெல்டா மற்றும் வட இலங்கை கடல் பகுதிகளை (சனிக்கிழமை) காலை அடைந்துள்ளது.

டிட்வா புயல் இன்று நள்ளிரவு வட தமிழக கடற்கரையை வந்தடையும் என்று கூறப்படு கிறது. வட தமிழக கடற்கரையில் இருந்து இன்று நள்ளிரவு முதல் நாளை அதிகாலை வரை 60 கி.மீ. ,50கி.மீ.,25கி.மீ.தொலைவில் நெருங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது . பொதுவாக காற்றின் சுழற்சி 63 கி.மீ. முதல் 83 கி.மீ. வேகத்தில் இருந்தால் அது புயலாக கணக்கில் கொள்ளப்படும். தற்போது வரை 65 கி.மீ. வேகத்தில் காற்று சுழற்சி இருக்கிறது. இலங்கை பரப்பில் இருந்து விலகி, டெல்டாவை அடையும்போது புயல் காற்று சுழற்சியின் மைய வேகம் 70 முதல் 80 கி.மீ. வரை அதிகரிக்கும் என வானிலை ஆய்வாளர் டெல்டாவெதர்மேன் ஹேமச்சந்தர் தெரிவித்திருந்தார். அதாவது புயல் தன்னுடைய சக்தியை புதுப்பித்து க்கொண்டு பயணிக்கும் என சொல்லப்படுகிறது. டெல்டா நிலப்பரப்பில் ஊடுருவும் டிட்வா புயல் மேலும் டெல்டா கடற்கரையை நெருங்கும்போது பசிபிக் உயர் அழுத்தம் காரணமாக புயல் மிகவும் மெதுவாக நகரவோ அல்லது நிற்கவோ வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும், அந்த நேரத்தில் புயலின் மேற்கு பகுதி அதாவது முன் பகுதி காவிரி டெல்டா பகுதிகளில் கரையைத் தொட இருப்பதாகவும், அது முழுமையாக கரையை கடக்காது எனவும் ஹேமச்சந்தர் கூறினார். இந்த புயல் காரணமாக டெல்டாவில் இன்றும், சென்னை உள்ளிட்ட வடகடலோரமாவட்டங்களில் இன்று பிற்பகலில் இருந்து நாளை மறுதினம் (திங்கட்கிழமை) வரையிலும் கன முதல் மிக கனமழையும், ஒரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும் எனவும், அதுவும் டெல்டாவில் இன்று குறுகியநேரத்தில் தீவிர கனமழை கொட்டித்தீர்க்கவும் வாய்ப்பு உள்ளது. சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணா மலை, கள்ளக்குறிச்சி,பெரம்பலூர், சேலம், அரியலூர், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை,திருச்சி.

மஞ்சள் அலர்ட்

கரூர், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, வேலூர்,திருப்பத்தூர்

தென்மேற்கு வங்க கடல் பகுதியில் டிட்வா புயல் வடக்கு திசை நோக்கி நகர்ந்து வரும் நிலையில் இன்று அதிகாலைமுதலேசென்னை மற்றும் புறநகரில் பரவலாக மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் மித மான மழை பெய்தாலும் சென்னை முழுவதும் பரவலாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது.

டிட்வா புயல் ஆழ்ந்த காற்றழுத்ததாழ்வுமண்டலமாக சென்னையை நாளை (நவ.30) மாலை நெருங்கும் என்று தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார். மேலும் சென்னையிலிருந்து 380 கிலோமீட்டர் தொலைவில் நிலைகொண்டுள்ள டிட்வா புயல் காரணமாக, சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் இன்று மாலை முதல் படிப்படியாக மழை அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## தேர்தல் ஆணையத்தையே விலைக்கு வாங்கிவிட்டார் அன்புமணி
## பாமக நிறுவனர் ராமதாஸ் பரபரப்பு குற்றச்சாட்டு




தேர்தல் ஆணையத்தை அன்புமணி விலைக்கு வாங்கிவிட்டதாக பாமக நிறுவனர் ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

கடலூர் மாவட்டம் வடலூரில் நடந்த பாட்டாளி மக்கள் கட்சியின் ஒருங்கிணைந்த பொதுக்குழு கூட்டத்தில் பேசிய ராமதாஸ், "எனக்கு நடந்தகொடுமைஉங்களுக்கு தெரியும். என்னுடைய உயிரை மட்டும்தான் அன்புமணி பறிக்கவில்லை, மற்ற எல்லாவற்றையும் பறித்துவிட்டார். 46 ஆண்டுகளாக நான் சிந்திய வியர்வை வீணாகப் போய்விடக்கூடாது. என்னுடைய உரிமையை யாரும் பறிக்கமுடியாது.உச்சநீதிமன்றத்திற்குச் சென்றாலும் முடியாது. தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம். கட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட அன்புமணியின் பதவிக்காலம் முடிந்துவிட்டது. இப்போது ஏமாற்றி பொய் சொல்லி தேர்தல் ஆணையத்தையே விலைக்கு வாங்கிவிட்டார். உடனிருந்தவர்களை விலைக்கு வாங்கியதுபோல தேர்தல் ஆணையத்தையே இப்போது விலைக்கு வாங்கிவிட்டார். உண்மையை சொன்னாலும் தேர்தல் ஆணையம் புரிந்துகொள்ள மறுக்கிறது. பணம் பத்தும் செய்யும் என்று சொல்வார்கள். அனைவரும் அன்புமணியின் சூழ்ச்சியை புரிந்துகொண்டுள்ளனர். அன்புமணி எந்த நீதிமன்றத்திற்குச் சென்றாலும் இந்த ராமதாஸ்தான்ஜெயிப்பார்.ராமதாஸையாராலும் தோற்கடிக்க முடியாது. அன்புமணியின் தலையீட்டால்தான் பாமக இன்று இந்த நிலையில் இருக்கிறது. இனி எதுவும் விட்டுக்கொடுக்க முடியாது. என்னுடைய உழைப்பை யாரும் பறிக்க முடியாது. உனக்கு வரும் கூட்டம் காசு கொடுத்து வரும் கூட்டம். ஆனால் என்னைப் பார்க்க மக்கள் வருவார்கள்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளில் சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று பிறந்த குழந்தைக்கு சுரண்டை நகர திமுக செயலாளர் கணேசன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் திரு #வே_ஜெயபாலன் குழந்தை மோதிரம் அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடிய நிகழ்ச்சியில்நகர கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# இடைக்கழிநாடு பேரூராட்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற



தொகுதிக்கு உட்பட்ட இடைக்கழிநாடு பேரூராட்சியில்தமிழகதுணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளைமுன்னிட்டு பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார் அவர்களின் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது இதில் பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு புடவை மற்றும் பிரியாணி வழங்குதல் மரக்கன்றுகள் வழங்கல் அரசு மருத்துவமனையில் பிறந்த பெண் குழந்தைக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது மேலும் இடைக்கழிநாடு அரசு பள்ளியில் படிக்கும் 2000 மாணவ மாணவிகளுக்கு பேனா மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டது நல்லூரில் இயங்கி வரும் தனியார் மனநல காப்பகத்தில் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி மதிய உணவு வழங்கப்பட்டதுஇந்தநிகழ்ச்சியில் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

# புக்கத்துறை ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்

## க.சுந்தர் எம்.எல்.ஏ. பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் புக்கத்துறை ஊராட்சியில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம் நேற்று, நடந்தது. சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர்,எம்,எல்,ஏ சுந்தர், சுகாதார துணை இதில், புக்கத்துறை, படாளம், ஜானகிபுரம், வையாவூர், நெல்லி, மாமண்டூர்சுற்றுவட்டார கிராமங்களைச் சார்ந்த



புக்கத்துறை ஊராட்சிக்குட்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியில், நேற்று காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை, தமிழக முதல்வரின், 'நலம் காக்கும்' ஸ்டாலின் மருத்துவ முகாம் நடந்தது.

இந்நிகழ்வில், புக்கத்துறை ஊராட்சி மன்ற தலைவி சொரூபராணி எழிலரசு, தலைமையிலும் இதில் இயக்குநர் பானுமதி மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்யசாய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை வழங்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு, அனைத்து உடல் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் பங்கேற்று பயன் பெற்றனர். இந்நிகழ்வில், மதுராந்தகம் பகுதி சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர். புக்கத்துறையில் நடந்த 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாமில், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கியமக்கள் பிரதிநிதிகள். உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்



திருச்செந்தூர் அருகேயுள்ள செம்மறிகுளம் கஸ்பா பகுதிக்கு அதிக அளவு தண்ணீர் வந்ததால், அருகே உள்ள வாழைத் தோட்டங்களுக்குள் வெள்ளம் புகுந்தது. வயல்களை வெள்ளம் சூழ்ந்ததால் விவசாயிகள் படகில் சென்று வாழைத்தார்களை அறுவடை செய்தனர்.



# சுரண்டை நகராட்சி சார்பில் பத்தாயிரம் பனை விதைகள் நடும் விழா

சுரண்டை நகராட்சி சார்பில் நடைபெற்ற பத்தாயிரம் பனை விதைகள் நடும் விழாவில் கலெக்டர் கமல் கிஷோர்,பழனி நாடார் எம்எல்ஏ, மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், நகராட்சி சேர்மன் வள்ளி முருகன் ஆகியோர் பங்கேற்று பனை விதைகளை நட்டனர்.



சுரண்டை நகராட்சி சார்பில் சுரண்டை ஆலடிபட்டி கண்டையன் குளத்தில் பத்தாயிரம் பனை விதைகள் நடும் தொடக்க விழா நடைபெற்றது.விழாவிற்கு நகராட்சி கமிஷனர் நாகராஜ் தலைமைதாங்கினார். நகராட்சி பொறியாளர் முகைதீன் முன்னிலை வகித்தார். விழாவில் மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், பழனி நாடார் எம்எல்ஏ, மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், சுரண்டை நகர் மன்ற தலைவர் வள்ளி முருகன் ஆகியோர் பங்கேற்று பனை விதைகளை நட்டு விழாவை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் நகர காங்கிரஸ் தலைவர் ஜெயபால், நகர திமுக பொறுப்பாளர் கூட்டுறவு கணேசன், பால் என்ற சண்முகவேல், நகராட்சி தலைமை கணக்காளர் முருகன், ஆய்வாளர் மகேஸ்வரன், ஜேபஸ் பொன்னையா,கவுன்சிலர்கள் பாலசுப்ரமணியன்,அமுதா சந்திரன்,வேல்முத்து,ராஜ்குமார், உஷா பேபி பிரபு,ரமேஷ்,மாரியப்பன்,செல்வி, அம்ஷா பேகம், திமுக நிர்வாகிகள் குருங்காவனம் வெள்ளத்துரை பாண்டியன்,பூல் பாண்டியன்,சாமுவேல் மனோகர் மற்றும் ஏராளமான திமுக, காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள, கே.ஜி.ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில்

# 29 வது பட்டமளிப்பு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது

## சுமார் 350க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பட்டங்களை பெற்றனர்

கோவை கே.ஜி. குழுமங்களின் கீழ் இயங்கி வரும் கே.ஜி.ஹெல்த்



சயின்ஸ் கல்லூரியின் 29 வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாக அரங்கில் நடைபெற்றது...

கே.ஜி. மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனத்தின் தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்ற விழாவில், கே.ஜி.ஐ.எஸ்.எல்.கல்வி குழுமங்களின் நிர்வாக அறங்காவலர் அசோக் பக்தவத்சலம் முன்னிலை வகித்தார்..

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக, மைசூரு ஜே.எஸ்.எஸ். உயர் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை வேந்தர் டாக்டர் பசவங்கவுடப்பா கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுக்கு இளங்கலை. மற்றும் முதுகலை பட்டங்களை வழங்கினார்.

இதில்,செவிலியர் துறை மாணவர்களும், பிசியோதெரபி, அலய்டு ஹெல்த் சயின்ஸ், மற்றும் ஜி.என்.எம்.ஆகிய துறைகள் என மொத்தம் 315 இளங்கலை மாணவர்களுக்கும்,45 முதுகலை மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டது..

தொடர்ந்து,தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்கள் சிறப்பு பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர் விழாவில் சிறப்புரையாற்றிய தலைமை விருந்தினர்கள்,நவீன தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்வதில் மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் எனவும் ,மருத்துவ துறையில் தற்போதுவேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதால்,மாணவர்கள் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தனர்...

விழாவில் கல்லூரி முதல்வர்,துறை தலைவர்கள்,பேராசிரியர்கள், மாணவ,மாணவிகள்,பெற்றோர்கள், என பலர் கலந்து கொண்டனர்..

# புதுச்சேரியில் உள்ள அனைத்து தொழிற்சாலை பணியாளர்களுக்கும் இரவுப் பணி ரத்து

புதுச்சேரி:

டிட்வா புயல் எதிரொலியாக புதுச்சேரியில் உள்ள அனைத்து தொழிற்சாலை பணியாளர்களுக்கும் இரவுப் பணி ரத்து செய்யப்பட்டு உள்ளது.

புதுச்சேரிக்கு உட்பட்ட ஆலைகளில்பணிபுரியும் பணியாளர்களுக்கு இன்று இரவுப் பணி ரத்து செய்யப்படுவதாக புதுச்சேரி ஆட்சியர் தெரிவித்தார்.




வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


## ரிட்வா புயல் கனமழை காரணமாக

# செங்கல்பட்டு மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் விடப்பட்ட நிலையில் தனியார் பள்ளி இயங்கியது

## பொதுமக்களிடையே பெரும் சர்ச்சை

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் இயங்கி



வரும் விவேகானந்தா வித்யாலயா தனியார் மேல்நிலை பள்ளியில் 500கும் மேற்பட்ட மாணவ மாணவிகளை கொண்டு தேர்வு ஒரு திருவிழா எனும் நிகழ்ச்சியை தனியார் தொலைக்காட்சி தொகுப்பாளர் மகேஷ் என்பவரை வைத்து மதுராந்தகம் அருகே சிலாவட்டத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடத்தியது இன்று டிட்வா புயல் பல மாவட்டங்களில் கனமழையின் பல மாவட்டங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும் மேலும் சுமார் 50 முதல் 120 கிலோமீட்டர் வரை காட்டுங்கள் வீச கூடும் அதன் காரணமாக தமிழக அரசு பள்ளியில் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்கப்படக்கூடாது எனவும் சிறப்பு வகுப்புகளும் எதுவும் நடத்தக்கூடாது எனவும் நேற்று அறிவித்திருந்த நிலையில் மதுராந்தகத்தில் இயங்கி வரும் பள்ளியில் மட்டும் இன்று காலை 7.30 மணிக்கு மாணவ மாணவிகளை அழைத்து வந்து திருமண மண்டபத்தில் வைத்து இந்த சிறப்பு நிகழ்ச்சி நடத்தியதுஅரசு எந்தவித முன்னேற்றத்திற்கு நடவடிக்கையாக அறிவிப்பு அறிவித்திருந்தாலும் சில பள்ளி நிர்வாகம் காதில் போட்டுக் கொள்வதில்லை

அறையில்500க்கும்மேற்பட்டமாணவமாணவிகளை வைத்து அரசு விதிமுறைகளை மீறி நடைபெற்றது எனவே சம்பந்தப்பட்ட கல்வித்துறை அதிகாரிகள் இந்த பள்ளியின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது

குறிப்பாக இதில் பள்ளி மாணவர் ஒருவர் பள்ளி பேருந்தில் ஏறும்போது ஜன்னலோர கண்ணாடி மாணவரின் கையில் கிழித்து உள்ளது அந்த மாணவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து பின்னர் வீட்டிற்கு அனுப்பி உள்ளனர் மேலும் மாணவர்கள் முக கவசம் எது மணியாமல் அருகருகே அமர்ந்து இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொடர் பனி, மழை எதிரொலி: மதுரையில் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.4,500க்கு விற்பனை



மதுரை: மதுரை மாவடத்தில் நீடிக்கும்தொடர் பனி மற்றும் மழையால் மதுரை மல்லிகைப்பூ உற்பத்தி முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால், மல்லிகைப் பூ பற்றாக்குறையால் முகூர்த்த நாட்கள், விழாக் காலங்கள் இல்லாமலேயே ஒரு கிலோ மல்லிகைப்பூ வரலாறு காணாத வகையில் ரூ.4,500 என விற்பனையாகிறது.

மதுரை மாவட்டத்தின் மண்வளம், தட்பவெப்ப சூழ்நிலையில் உற்பத்தியாகும் மல்லிகைப்பூக்கள் குண்டு, குண்டாக வெண் நிறமும், தடித்த காம்பு, தனித்துவமான மணத்தையும் கொண்டுள்ளதால் உலகளவில் பிரசித்தி பெற்றது. அதற்காக, மதுரை மல்லிகைப் பூக்களுக்கு கடந்த 2012-13-ம் ஆண்டில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

மேலும்,மதுரைமல்லிகைப்பூ,நறுமணப்பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது. அதனால், உள்ளூர் பயன்பாட்டிற்கு போக, சிங்கப்பூர், குவைத், மலேசியா, துபாய் போன்ற வெளிநாடுகளுக்கும் விமானங்கள் மூலம்,நறுமணப்பொருட்கள்தயாரிப்பதற்குஏற்றுமதி செய்யப்பட்டு கடல் கடந்தும் மணம் வீசி வருகிறது.

தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் மலர் சந்தைகளில் மதுரை மல்லிகைப் பூக்களுக்கும் தனி வரவேற்பு உண்டு.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் துவக்கி வைத்த நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் ஈரோடு மாவட்டம் ஈரோடு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாரதி கல்வி நிலையம், நசியனூரில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்தமிழ்நாடுவீட்டுவசதி மற்றும்நகர்ப்புறவளர்ச்சித்துறை, மதுவிலக்குஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ,ஈரோடு ஒன்றிய செயலாளர் தோப்பு D.சதாசிவம் , நசியனூர் பேரூராட்சி தலைவர் மோகனபிரியா லோகேஸ்வரன், துணைத் தலைவர் பத்மநாபன், கதிரம்பட்டி மகாலிங்கம், மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள், பேரூர் செயலாளர் மோகனசுந்தரி, துறை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள், திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கபடி போட்டி கோபி குள்ளம்பாளையம் அருகே நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் N. நல்லசிவம் , அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம் , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் ,கோபி சேர்மன் நாகராஜ் மற்றும் டி. என். பாளையம் ஒன்றிய கழக செயலாளர் சிவ பாலன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## நந்தா இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பில் 8வது இயற்கை மருத்துவ தினக் கொண்டாட்டம்

ஈரோடுநந்தாஇயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி மற்றும்




மருத்துவமனை சார்பில் 8வது இயற்கைமருத்துவ தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு கருத்தரங்கம், இலவச மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு பேரணி போன்ற நிகழ்வுகள் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்றது. முதலாவதாக, பெருந்துறை சார்பு நீதி மன்றத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் வரை இயற்கை மற்றும் யோகா பற்றிய விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் ஈரோடு பெருந்துறை முக்கிய சாலைகளில் பேரணியாக செல்லும்போது இயற்கை உணவு முறைகள் விழிப்புணர்வு குறித்த "துண்டு பிரசுரங்களை" பொது மக்களுக்கு ஆங்காங்கே மாணவ - மாணவிகளால் வழங்கப்பட்டது.

மன இதனைத் தொடர்ந்து, நசியனூர் அரசு பள்ளி மற்றும் விஜயமங்களத்தில் செயலபட்டு வரும் ஜான்சன் டெக்ஸ்டையில் நிறுவனத்தில் இலவச மருத்துவ முகாங்கள் நடைபெற்றது. இம்முகாமில் நோய்க்கு ஏற்றார் போல் உணவு முறைகள், அழுத்தத்தினை குறைப்பதற்கான ஆசனங்கள், மூச்சு பயிற்சிகள், அக்குபஞ்சர் போன்ற பல்வேறு வகையான இயற்கை மருத்துவங்கள் 10க்கும் மேற்பட்ட மருத்துவர்களின் ஆலோசனையின் படி பயிற்சி மாணவர்கள் உதவியுடன் 150க்கும் மேற்பட்ட ஊர் பொதுமக்களுக்கும், ஜான்சன் டெக்ஸ்டையில் நிறுவன ஊழியர்களுக்கும் இலவச சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இறுதியாக நடைபெற்ற இயற்கை மற்றும் யோகா பற்றிய கருத்தரங்கில் நந்தா கல்வி நிறுவனங்களில் பயின்று வரும் சுமார் 300க்கும் மேற்பட்ட மருத்துவத் துறை மாணவர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தார்கள்.

அனைத்து நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் முதல்வர் மருத்துவர் ரீவ்ஸ் ஜஸ்ட்லீன் தாஸ் மற்றும் பயிற்சி மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் மற்றும் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் மற்றும் நிர்வாக அலுவலர் மருத்துவர் ஜீ. தர்மராஜ் ஆகியோர்பாராட்டி, தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

### தூத்துக்குடியில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

## அரசு மருத்துவமணையில் 11 பிறந்த குழந்தைகளுக்கு அமைச்சர் கீதாஜீவன் தங்கமோதிரம் அணிவித்தார்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாநில இளைஞர் அணி




செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமணையில் பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்து தாய்மார்களுக்கு ஊட்டசத்து பரிசு பெட்டகங்களை வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார். நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாநகராட்சி மண்டலத் தலைவர் நிர்மல்ராஜ், உறைவிட மருத்துவர் சைலஸ்ஜெபமணி, மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன்ஜேக்கப், மாநகர துணைச்செயலாளர் கனகராஜ், பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரிதங்கம், மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், அயலக அணி அமைப்பாளர் கிறிஸ்டோபர் விஜயராஜ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரவி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ரூபராஜா, மாணவரணி துணை அமைப்பாளர் சத்யா, விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டினோ, பகுதி செயலாளர்கள் ராமகிருஷ்ணன், கவுன்சிலர்கள் சரவணக்குமார், இசக்கிராஜா, பட்சிராஜ், முன்னாள் பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், வட்டச்செயலாளர்கள் கதிரேசன், சிங்கராஜ், சுப்பையா, பாலகுருசாமி, செல்வராஜ், செந்தில்குமார், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், துரை, மற்றும் மணி, அல்பட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பாலியல் வழக்கில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அதேகொம் பின்னகம் பெண்கள் அமைப்பு சார்பில் நிவாரண பொருள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் சரஸ்வதி கலந்து கொண்டு 20க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சுமார் 10,000 மதிப்புள்ள மளிகை பொருட்கள் உணவு மற்றும் பணம் வழங்கினர் இந்த நிகழ்வில் உதவி காவல் ஆய்வாளர் ஜெயலட்சுமி மற்றும் காவலர்கள் அதேகொம் பின்னகம் நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.



டிட்வா புயல் மீட்புப் பணியில் ஈடுபட சென்னை மற்றும் புறநகரில் 900 தீயணைப்புப் படை வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். மேலும் சென்னை காவல் துறையும் களத்தில் இறங்கியுள்ளது.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## மாவட்ட வருவாய் அலகில் ஈரோடு வட்டத்தில் காலியாக உள்ள 9 கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு நடைபெற்றது

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ,மாவட்ட வருவாய் அலகில் ஈரோடு வட்டத்தில்



காலியாக உள்ள 9 கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு நடைபெற்ற வேளாளர் மெட்ரிக்மகளிர்மேல்நிலைப்பள்ளிமற்றும்வேளாளர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மையங்களில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (29.11.2025) ஈரோடு மாவட்ட வருவாய் அலகில் ஈரோடு வட்டத்தில் காலியாக உள்ள 9 கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு நடைபெற்ற வேளாளர் மெட்ரிக் மகளிர் மேல்நிலைப்பள்ளி, மற்றும் வேளாளர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மையங்களில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வருவாய் அலகில் ஈரோடு வட்ட அளவில் காலியாக உள்ள 9 கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்ப இணைய வழியில் விண்ண ப்பங்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கூராய்வு வருவாய் வட்டாட்சியர் மூலம் செய்யப்பட்டு, ஏற்பளிக்கப்பட்ட விண்ணப்பதார ர்களுக்கும், மாவட்ட வேலைவாய்ப்பகம் மற்றும் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் மூலம் பெறப்பட்ட பட்டியலில் உள்ள ஏற்பளிக்கப்பட்ட விண்ணதா ரர்களுக்கும் இன்று காலை 09.00 மணி முதல் 9.30 மணி வரை தமிழ் வாசித்தல் மூலம் எழுத்துத் தேர்வு நடைபெற்றது

இந்த தேர்வில் 1,104 விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 772 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் 332 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத வருகைதரவில்லை. இதில் 3 மாற்றுத்திறானிகள் எழுத்து தேர்வு எழுதினார்கள்.

இந்த ஆய்வின் போது ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்து கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர் விஜயகுமார் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (29.11.2025) நசியனூர், பாரதி கல்வி நிலையத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு சஞ்சீவி பெட்டகத்தினை வழங்கினார்.

# தூத்துக்குடி மாநகராட்சி ஊழியர்கள் 100பேர் தயார் நிலையில் உள்ளனர்

## மேயர் ஜெகன் பெரியசாமி தகவல்




தூத்துக்குடி மாநகராட்சியில் அம்பேத்கர் நகர் பகுதி மெயின் சாலையில் ஸ்டெம் பார்க் அருகே தூத்துக்குடி மாப்பிள்ளை யூரணி பஞ்சாயத்து பகுதிகளில் இருந்து வெளியேறயக்கூடிய மழை நீர் ஆனது மழை நீர் வடிகால் வழியாக அனுப்பப்பட்டு வருகிறது இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி வடக்கு மண்டல மாநகராட்சி ஊழியர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் டிட்வா புயல் காரணமாகபெய்துவரும் மழை காரணமாக கிழக்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டல பகுதிகளில் எந்தவித பாதிப்பும் கிடையாது வடக்கு மண்டலம் மற்றும் மேற்கு மண்டல பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் சுமார் 44 மின் மோட்டார்கள் மூலம் மழை நீர் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது 14வழித்தடங்கள் வழியாக மழைநீர் கடலுக்கு செல்கிறது நான்கு மண்டலங்களிலும் உதவி ஆணையர் தலைமையில் 100 மாநகராட்சி ஊழியர்கள் தயார் நிலையில் உள்ளனர். என மேயர் ஜெகன் பெரியசாமி தகவல்

வங்க கடலில் நிலவிவரும்டிட்வாபுயல் காரணமாக கடந்த இரண்டு நாட்களாக தூத்துக்குடி மாநகர பகுதிகளில் தொடர்ந்து 24 மணி நேரமாக மழை பெய்து வருகிறது இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி உள்ளது.


தூத்துக்குடி மாநகர பகுதிகளில் 60 வார்டுகளில் தாழ்வான பகுதிகளான 16 மற்றும் 17வது வார்டு பகுதி மற்றும் ஆதிபராசக்தி நகர் ரஹ்மத்து நகர் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு மழை நீரை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார் .

கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வரும் நிலையில் மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலம்மற்றும்தெற்கு மண்டல பகுதிகளில் இந்த மழை காரணமாக எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் நிரந்தரமாக 21 மின் மோட்டார்கள் மூலம் மழை நீர் அகற்றப்பட்டு வருகிறது மேலும் தற்போது கூடுதலாக 23 மின்மோட்டார்கள் என மொத்தம் 44 மின் மோட்டார்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து மழைநீர் வெளியேற்றப்பட்டுவருகிறது இந்த வெளியேற்றப்படும் மழைநீர் ஆனது 14 வழித்தடங்கள் மூலம் கடலுக்கு செல்கிறது மேலும் தூத்துக்குடி மாநகர பகுதிகளில் மண்டல வாரியாக உதவி ஆணையர் சுகாதார ஆய்வாளர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர் எந்தநேரத்திலும்பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மழை நீரை அகற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகமேயர்ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.



இந்து ஆட்டோ முன்னணி சங்கம் சார்பாக மாவட்ட கூட்டம் ஈரோடு இந்து முன்னணி அலுவலகத்தில் நடைபெற்றது. ஆட்டோ ஓட்டுநர் நலம் காக்க வேண்டுமென மாபெரும் கையெழுத்து இயக்கம் தமிழ்நாடு முழுவதும் இந்து ஆட்டோ தொழிலாளர்கள் முன்னணி சங்கமானது முன்னெடுத்து செயல்படுத்திக் கொண்டுள்ளது, அது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர்கள் கிஷோர் குமார் , செந்தில் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் மற்றும் சிறப்புரையாற்றினார்கள் மேலும் டிசம்பர் 4 ஆம் தேதிக்குள் ஈரோடு மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து ஆட்டோ ஓட்டுநர்களிடமும் சென்று மாபெரும் கையெழுத்து இயக்கத்தை சிறப்பாக செயல்படுத்த இந்து ஆட்டோ சங்க மாவட்ட பொறுப்பாளர்கள், மற்றும் நிர்வாகிகள் இணைந்து செயல்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது...

# "This Is Virat, Need Help": Russian Shadow Fleet Crew Before Drone Attack



*An unmanned sea vehicle struck a Russian oil tanker, 'Virat' in the Black Sea on Saturday. The same tanker had been previously hit by blasts late Friday.*

*The crew of the tanker reported a 'drone attack' in an intercepted open-frequency radio distress call. However, they were referring to unmanned maritime drones. In a video, the crew can be heard saying, "This is VIRAT. Help needed! Drone attack! Mayday!"*

*The Turkish transport ministry said on X, "The Virat, which was previously said to have been attacked by unmanned maritime vehicles approximately 35 nautical miles off the Black Sea coastline, was attacked again by unmanned maritime vehicles early this morning". Transport Minister Abdulkadir Uraloglu said, "An external impact means the vessel was hit by a mine, a rocket, or a similar projectile, or perhaps by a drone, or by an unmanned underwater vehicle. These are the first things that come to mind."*

*Although Virat suffered minor damage, it is in a stable condition, and the crew is also in good health.*

*Ukraine Claims Responsibility*

*AFP has reported that Ukraine is behind the attack on Russian 'shadow fleet' tankers. This comes in the backdrop of the Russia-Ukraine conflict at a time when Kyiv is under intense US pressure to sign a peace deal.*

*An official from the security service of Ukraine said that the joint operation to hit the 'shadow fleet' vessels was run by the SBU and Ukraine navy.*

*"Video (footage) shows that after being hit, both tankers sustained critical damage and were effectively taken out of service. This will deal a significant blow to Russian oil transportation," the official said.*

*"Modernised Sea Baby naval drones successfully targeted the vessels," a source in Ukraine's SBU security service told AFP. It shared a video that purported to show sea drones gliding towards the two ships, before sparking explosions.*



சாம்பியன் சீஃப் விளையாட்டு தலைவர் மற்றும் சாம்போ தமிழ்நாடு செயலாளர் & தென்னிந்திய தலைவருமான டாக்டர் மு.முகமது அனஸ் தமிழ்நாடு துணை முதல்வர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பிறந்தநாள் அன்று அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.




ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்வில் 202425 ஆண்டிற்கான சிறந்த இரத்ததானமுகாம் ஒருங்கிணைப்பு குழு வாக ஈரோடு விதைகள் குழுவையும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி ஈரோடு விதைகள் குழுவிற்கு கேடயமும், பாராட்டு சான்றிதழும் வழங்கினர்.

# முதலமைச்சர் பதவி விவகாரம்: கட்சி மேலிட முடிவுக்கு கட்டுப்படுவோம்

## சித்தராமையா, டி.கே. சிவகுமார் அறிவிப்பு



பெங்களூரு: முதல்வர் பதவி விவகாரத்தில் கட்சி மேலிடத்தின் முடிவுக்குக் கட்டுப்படுவோம் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையாவும், துணை முதல்வர் டி.கே. சிவகுமாரும் தெரிவித்துள்ளனர்.

காலை விருந்துக்கு தனது இல்லத்துக்கு வருமாறு சித்தராமையா, டி.கே.சிவகுமாருக்கு அழைப்பு விடுத்தார். இதையடுத்து,சிவகுமார், சித்தராமையாவின் இல்லத்துக்கு இன்று காலை சென்றார். இருவரும் உணவுஅருந்தும்புகைப்படங்கள் வெளியாகின.

இதையடுத்து, சித்தராமையாவும் டி.கே. சிவகுமாரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய சித்தராமையா, "காலை உணவுடன் டி.கே. சிவகுமாருடன் ஒரு சிறிய கலந்துரையாடல் நடத்தினேன். கட்சி மேலிடத்தின் அறிவுறுத்தலின் பேரில் இது நடந்தது. முதல்வர் பதவி தொடர்பாக எழுந்துள்ள குழப்பத்தைப் போக்க கட்சி மேலிடம் இருவருக்கும் அறிவுறை வழங்கி உள்ளது. இப்போது எந்தக் குழப்பமும் இல்லை. எதிர்காலத்திலும் குழப்பம் இருக்காது.

முதல்வர் பதவியைப் பொறுத்தவரை, கட்சி மேலிடம்எடுக்கும்முடிவுக்குக்கட்டுப்படநானும் டி.கே. சிவகுமாரும் முடிவு செய்துள்ளோம். அமைச்சர்களோ அல்லது எம்எல்ஏக்களோ எங்கள் அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் அல்ல.

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக சில எம்எல்ஏக்கள் டெல்லி சென்றிருக்கலாம். அதை வேறுவிதமாக பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. 2028-ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் கட்சியைவெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்வது குறித்து நானும் சிவகுமாரும் இன்று ஆலோசித்தோம். 2023 தேர்தலில் நாங்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றியது போல மீண்டும் இணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளோம். எங்களுக்குள் எந்த வேறுபாடுகளும் இல்லை. இப்போதும் இல்லை. எதிர்காலத்திலும் இருக்காது.

டிச. 8 முதல் பெலகாவியில் சட்டப்பேரவை குளிர்கால கூட்டத் தொடர் நடைபெற உள்ளது. இதுவரை நாங்கள் எதிர்ப்பை திறம்பட எதிர்கொண்டோம். தொடர்ந்து எதிர்கொள்வோம். அதற்குத் தேவையான உத்திகளை நாங்கள் வகுத்துள்ளோம்.

முதல்வர் பதவி குறித்த குழப்பங்களுக்கு ஊடகங்களே காரணம். பாஜகவும் ஜேடியுவும் நம்பிக்கையில்லாதீர்மானம் கொண்டுவரப் போவதாக செய்திகள் வெளியாகி உள்ளன. எங்கள் அரசாங்கம் உறுதியாக உள்ளது. எங்களிடம் 142 பேர் உள்ளனர். அவர்கள் வசம் 82 பேர் மட்டுமே உள்ளனர். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர முயன்றால் அது ஒரு தோல்வியுறும் முயற்சியாகவே இருக்கும்." என தெரிவித்தார்.

துணை முதல்வர் டி.கே. சிவகுமார், "கட்சி மேலிடத்தின் கட்டளைக்கு நாங்கள் கட்டுப்படுவோம். இன்று நானும் முதல்வரும் காலை உணவுக் கூட்டத்தை நடத்தினோம். அடுத்த சில நாட்களில் முதல்வர் எனது வீட்டுக்கு மதிய உணவு அல்லது இரவு உணவுக்கு வருவார். நாங்கள் ஒன்றாக இணைந்து வேலை செய்துள்ளோம். தொண்டர்கள் எங்களுக்கு ஆதரவாக இருந்துள்ளனர். தேர்தலில் கர்நாடக மக்கள் எங்களுக்கு மிகப் பெரிய உத்தரவை வழங்கியுள்ளனர்.

மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவது எங்கள் கடமை. நல்லாட்சியை வழங்குவதே எங்களின் நோக்கம். 2028 சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் குளிர்கால கூட்டத்தொடர் குறித்து நாங்கள் இருவரும் ஆலோசித்தோம். எதிர்க்கட்சிகளை சமாளிக்கவும்பதிலளிக்கவும் நாங்கள் முழுமையாக தயாராக உள்ளோம்.

முதல்வர் பதவியைப் பொறுத்தவரை கட்சி மேலிடத்தின் முடிவுக்கு ஏற்ப நாங்கள் செயல்படுவோம். நாங்கள் எப்போதும் கட்சிக்கு விசுவாசமானவர்களாக இருந்துள்ளோம். 2028-ல் நாங்கள் மீண்டும் ஆட்சி அமைப்போம். 2029 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைவர் கார்கே மற்றும் ராகுல் காந்திக்கு ஆதரவாக கர்நாடக மக்களின் ஆதரவை திரட்டுவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்." என தெரிவித்தார்

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.